(2) பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்றும் மேலவை உறுப்பினர்களின் பதவிக் கால நீட்டிப்பும், அக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தலும்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொது நிறுவனங்கள் குழு எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெற வில்லை. ஆதலால் மேற்படி குழுவின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித் திருப்பதால், அக்குழுவில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப் பினர்களே தொடர்ந்து 31-3-1979 முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் அக்குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றியிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்றவேண்டும் :—

திரு. எச். வி. ஹாண்டே,

திரு. ஆ. நல்லசிவம்,

திரு. பி. ஆர். தாமஸ்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை —

"1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற பொது நிறுவனங்கள் குழு எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும் முற்றுப்பெற வில்லை. ஆதலால் மேற்படி குழுவின் பதவிக்காலத்தை பேரவையில் நீட்டித் திருப்பதால், அக்குழுவில் தற்போது பணியாற்றுகின்ற மேலவை உறுப் பினர்களே தொடர்ந்து 31-3-1979 முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் அக்குழுவில் ஏற்பட்டுள்ள மூன்று வெற்றிடங்களில் கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள், உறுப்பினர்களாக பணியாற்றவேண்டும்.

திரு. எச். வி. ஹாண்டே,

திரு. ஆ. நல்லசிவம்,

திரு. பி. ஆர். தாமஸ்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.